**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.OS.No. 90 /2021**

**Depostition of witness of plaintiff – P.W.1(சக்கரபாணி)**

**08.03.2023**

**5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

5,6,7 பிரதிவாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்வது சம்பந்தமாக வருவாய் துறை மேல்அதிகாரிகளுக்கு புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல கொடுத்துள்ளேன். 4 ம்பிரதிவாதியின் தகப்பன் வழி தாத்தாவின் பூர்வீக சொத்து என 3,4 பிரதிவாதிகள் கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டுமே வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு எதிராக வழக்குமூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 முதல் 7 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றும் அவர்களுக்கு எதிராக எவ்வித வழக்குமூலமும் ஏற்படவில்லை என்றும் அவர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கேட்காததால் எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)